11th
March
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 22 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




ரமழானின் அருளை தவறாமல் பெற்றிடுவோம்!

# சுபீட்சமான நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

## குளியாப்பிட்டிய கூட்டத்தில் ஜனாதிபதி அறைகூவல்



மிக நெருக்கடியான காலத்தில் உதவியதைப் போல இந்த நாட்டைக் கடன் சுமையில் இருந்து மீட்டெடுக்கவும் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலை இலக்குவைத்து ஐக்கிய தேசியக் கட்சி

03ம் பக்கம்பார்க்க...

## ரமழான் மாத தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு இன்று!

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாதத்தின்

02ம் பக்கம்பார்க்க...

## சவூதி அரேபியா உட்பட பல நாடுகளில் இன்று முதல் நோன்பு

சவூதி அரேபியா உட்பட பல நாடுகளில் நேற்று மாலை ரமழான் பிறை தென்பட்டுள்ளதால் நளை திங்கட்கிழமை முதல் புனித நோன்பு மாதத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் ஜனாதிபதியாக ஆஸிப் அல் சர்தாரி பதவியேற்பு



பாகிஸ்தானின் 14 வது ஜனாதிபதியாக ஆஸிப் அல் சர்தாரி நேற்று மாலை உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டார்.


02ம் பக்கம்பார்க்க...

## அரகலய போராட்டத்தில் 17 ஐ.தே.க கூடாரங்கள்

### கோதாவின் நூலில் வெளியாகிய தகவல்

காலி முகத்திடலில் இடம்பெற்ற அரகலய போராட்டத்தின் போது ஐக்கிய தேசிய கட்சியினுடைய 17 கூடாரங்கள் இருந்ததாக ஐ.தே.க வின் முக்கியஸ்தர்கள் ஒருவர் தகவல்

02ம் பக்கம்பார்க்க...




## இருபது பள்ளிகளுக்கு ஒரு கோடி ஒதுக்கீடு

வருமானம் குறைந்த 20 பள்ளி வாசல்களை அபிவிருத்தி செய்வதற்கு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் ஒரு கோடி ரூபாவை பகிர்ந்தளிக்கவுள்ளது.

திணைக்களத்தில் வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் ஹஜ் மூலம் எஞ்சிய நிதி என்பவற்றை பயன்படுத்தி இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் லாப்தின் தெரிவித்தார்.

## முஸ்லிம் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

### கிழக்கு மாகாண முஸ்லிம் விவகாரங்கள் குறித்து ஆராய்வு!



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களுக்கிடையிலான சந்திப்பு பாராளுமன்ற

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டில் இன்று கடும் வெப்பம்

### செம் மஞ்சள் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் வெப்பமான வானிலை தொடர்பான செம்மஞ்சள் எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## ரமழான்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு இன்று திங்கட்கிழமை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலின் மாநாட்டு மண்டபத்தில் கூட இருப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

மேற்படி பிறை பார்க்கும் மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நிர்வாகிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிறைக் குழு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பள்ளிவாசல்கள், ஸ ாவியாக்கள், தரீக்காக்களின் பிரதி நிதிகள், மேமன் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்புகளுக்கு - 0112432110, 0112451245, 0777353799




## நாட்டில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளது.

இன்றைய தினத்திற்கான (11) அறிவிப்பையே வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி மேல், வடமேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பமான வானிலை நாளைய தினம் அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என அந்த அறிவிப்பில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கிழக்கு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.சி. பைசால் காஸிம், செய்யத் அலிஸ ாஹிர் மௌலானா, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுனபின் ஆகியோர் பங்கேற்றதுடன் கிழக்கு மாகாண முஸ்லிங்களின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் இங்கு நீண்டநேரம் ஆராயப்பட்டதுடன் கிழக்கு மாகாண அண்மைய இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்ற பிரச்சினைகள், கிழக்கு மாகாண சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமன விடயங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிங்களின் காணி பிரச்சினைகள், மூடப்பட்டுள்ள காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகைக்கு அனுமதி வழங்கும் விவகாரம், மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாட்டு விடயங்கள், எனப்பல சமூக நல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு ஆராயப்பட்டது.

இவற்றில் பல விடயங்களுக்கு முழுமையான தீர்வும், சில விடயங்களுக்கு துறைசார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாக தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இதுவிடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும்- முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான சந்திப்புக்கள் ஊடாக முஸ்லிங்களின் பிரச்சினைகளை பேசி தீர்க்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார். மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கும் விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

2008 முதல் 2013 வரை ஆசிப் அலி சர்தாரி பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார்.

கட்சி கூட்டணி

பாகிஸ்தானில் கடந்த மாதம் 8-ந்தேதி நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. எனினும் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

நவாஸ் ஷெரீப், பிலாவல் பூட்டோ கட்சிகள் கூட்டணி அரசை அமைத்துள்ளன. பிரதமராக நவாஸ் ஷெரீப் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பதவியேற்றார்.

இதற்கிடையே நவாஸ் ஷெ ரீப், பிலாவல் பூட்டோ கட்சி கூட்டணி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அவருக்குப் போட்டியாக எதிர்க்கட்சிகள் சார்பில் பஷ்துன்க்வா மில்லி அவாமி கட்சித் தலைவர் மக்மூத்கான் அஷ்காஸ் களமிறங்கினார். இவருக்கு இம்ரான்கானின் கட்சி ஆதரவு தெரிவித்தது.

அதிக வாக்கு

இந்நிலையில், பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு நாடாளுமன்றத்திலும் அனைத்து மாகாண சட்டசபைகளிலும் நேற்று நடைபெற்றது.

## அரகலய...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அவரினால் வெளியிடப்பட்ட நூலின் மூலம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பணத்தில் தங்கி இருக்கும் அரசுசார்பற்ற இயக்கங்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், யூடிபர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சி செயற்பாட்டாளர்களும் அரகலய போராட்டத்தில் இருந்தாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காலி முகத்துடலில் உள்ள அனைவரும் எனக்கு எதிரானவர்கள்.

கிரிக்கெட் வீரர்கள் அவர்களின் மனைவிமார் என அனைவரும் அரகலய போராட்டத்தில் இருந்தார்கள்.











பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா 09-03-2024 திகதி அதிபர் பாஹீமா பாயிஸ் தலைமையில் கல்லூரி பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி கல்லூரியின் அதிபராக 10 வருட காலம் சேவையாற்றி மூன்று வைத்தியர்கள் உருவாக பங்களிப்பு செய்த அதிபரை கௌரவித்தது சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தினால் நினைவுச் சின்னமொன்று வழங்கப்பட்டது. பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் அதிபரிடம் நினைவுச் சின்னம் கையளிப்பதையும் பள்ளிச் சங்க இணைச் செயளாலர் எம.எம்.எம் ஷ ஹாப் ஹாஜியார் உறுப்பினர் அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) கோட்ட கல்விப் பணிப்பாளர் சோமரத்ன ஆகியோர் உடனிருப்பதையும் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - பேருவளை பீ எம் முக்தார்)

## சுபீட்சமான...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஏற்பாடு செய்திருந்த “நிதர்சனம்” என்ற முதலாவது பொதுக் கூட்டம், குருணாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று நடைபெற்றது.

குளியாப்பிட்டிய நகர சபை மைதானத்தில் இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆயிரக் கணக்கான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்று பங்கேற்கும் முதலாவது மக்கள் பொதுக் கூட்டம் இது என்பது விசேட அம்சமாகும்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

மிகவும் கடினமான நேரத்தில் ஏராளமானோர் எனக்கு ஆதரவு வழங்கினீர்கள். நாம் அனைவரும் இணைந்து, குறுகிய அரசியல் இலாபத்திற்காக பிரச்சினைகளை அணுகாமல் முன்நோக்கிச் செல்ல வேண்டும். 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் உண்மைப் பேசி, முன்நோக்கிச் செல்வோம் என்று கூறினேன். அநேகமானோர் அதனை எதிர்த்தனர். தேர்தல் மேடைகளில் பேட் தருகிறோம், சப்பாத்து தருகிறோம் என்று கூறினார்கள். எனினும், இதனைவிட விரிவாக சிந்திக்க வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்தேன். இதனால் பிளவு ஏற்பட்டது. தற்போது முன்நோக்கிப் பயணிக்க ஒரேயொரு கட்சி மட்டுமே இருக்கிறது. அது ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே. டி.எஸ். சேனாநாயக்க சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த இந்த நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். 2022ஆம் ஆண்டு இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. சஜித் பிரேமதாச முன்வரவில்லை. அநுரகுமார திஸாநாயக்க முன்வரவில்லை. சம்பந்தன் ஐயா சுகயீனமுற்றிருந்தார். வேறு வழி இருக்கவில்லை. அப்போதைய ஜனாதிபதி எனக்குப் பொறுப்பேற்குமாறு கூறினார். நாடு எங்கே செல்கிறது என்று தெரியாமல் இருந்தது. அதனால் தான் நான் பொறுப்பேற்றேன். ஜூலை மாதம் ஜனாதிபதி மாளிகையை சுற்றிவளைத்தபோது அவர் சென்றுவிட்டார். எனது வீட்டை எரித்தனர்.

ஆனால் நான் இருந்தேன். நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். பதவிப் பிரமாணம் செய்தால் அந்த இடத்தை தீவைப்பதாக சிலர் கூறினார்கள். வாளுகாரமா விகாராதிபதி அங்கு பதவிப் பிரமாணம் செய்துகொள்ளச் சொன்னார்.

அங்கு நான் பதவிப் பிரமாணம் செய்துகொண்டேன். மகிந்த ராஜபக்சவை தொடர்புகொண்டு, இதனைப் பொறுப்பேற்பதாக கூறினேன். ஐ.எம்.எவ். உடன் உங்களுக்கு மட்டுமே பேச முடியும். அதனால் நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள், எமது உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று மகிந்த என்னிடம் கூறினார். இன்று மகிந்த ராஜபக்சவைத் திட்டும் தரப்பினர், ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில் அன்று மகிந்த ராஜபக்சவிடம் நேரில் சென்று உதவி கோரினார்கள். நான் வெறுமனே தொலைபேசியில் பேசினேன். இவ்வாறு பொய் செய்ய வேண்டாம் என்று சஜித் தரப்பினருக்கு கூறவிரும்புகிறேன்.

அதன்பின்னர், மகிந்த ராஜபக்சவின் விசுவாசி ஜீ.எல். பீரிசை அவர்களது பக்கம் எடுத்துக் கொண்டார்கள். ஜீ.எல். நல்லவர். மகிந்த கெட்டவர். அவர்களின் கொள்கை எனக்குப்புரியவில்லை. ஐ.எம். எவ். உடன் பேசுவதற்கு எதிர்க் கட்சியினரை அழைத்திருக்கிறேன்.

ஆனால் அவர்கள் வர முடியாது என்று எழுத்து மூலம் அறிவித்துள்ளார்கள். இந்த நாட்டை கடன் சுமையில் இருந்து மீட்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MARCH 03 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# கோட்டாவின் குமந்திரனய என்ற நூல் என்ன கூறுகின்றது??

இவ்வாரத்தில் மூன்று முக்கிய அரசியல் பிரமுகர்கள் தம்மை பற்றிய பல விளக்கங்களுடன் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளமை அரசியல் அரங்கில் பரவலாக பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க கடந்த சவாலுக்குரிய காலக்கட்டத்தில் அவரது வகிபாகத்தை நாட்டின் கார்ட்டூன் வரைஞர்கள் எப்படி நோக்கினார்கள் என்பதனை திரட்டி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன வெளியிட்டசெநளசெநண என்ற நூல் வியாழன் அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.இதே தினம் காலை வைபவங்கள் எதுவுமின்றி புத்தகக் கடைகளின் ஊடாக முன்னால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குமந்திரணய என்ற தலைப்பில் (சதி) ஜனாதிபதி பதவியிலிருந்து தான் நீக்கப்பட்டது பற்றி 192 பக்கத்தில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இரு நூல்களை வெளியிட்டார்.

இந்நூலை வெளியிட்டு சில மணித்தியாலங்களில் இதன் பிரதிகள் சகலதும் முடிந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.1800 ரூபாவிற்கு இந்நூல் விலை குறிக்கப்பட்டிருந்தது.

இதேநேரம் முன்னால் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாகீர் மார்க்கார் எழுதிய மகே கதாவ அதாவது எனது கதை என்ற 641 பக்கங்களை கொண்ட அவரது சுயசரிதை நூல் செவ்வாய் அன்று அவர் படித்த ஆனந்தா கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எமது இன்றைய அவதானம் கோட்டாபய ராஜபக்ஷ எழுதி வெளியிட்ட குமந்திரணய என்ற நூல் பற்றியே..

இந்நூலின் உள்ளடக்கமானது ஜனநாயக ரீதியில் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஒருவரை வெளிநாட்டு சக்திகளின் தலையீடு மற்றும் இலங்கை சமூகங்களின் விஷேட பல பிரிவினரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட சதி மற்றும் வன் செயல்களினால் பதவி நீக்கப்பட்டது தொடர்பான ஒரு கதையே என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.நூலின் பல இடங்களில் சிறுபான்மை சமூகங்களான தமிழர்களினதும் முஸ்லீம்களினதும் செறற்பாடுகளினாலேயே தன்னை பதவியிலிருந்து நீக்கும் சதி நடந்ததாக கோட்டாபய ராஜபக்ஷ கூறுகிறார்.

நூலின் முதல் அத்தியாயத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்கு வாக்களிக்காமை பற்றி குறிப்பிடுகின்றார்.பல உதாரணங்களை குறிப்பிட்டுள்ள அவர் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை தேர்தல் தொகுதியில் தனக்கு 64சதவீதம் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்த போதும் சம்மாந்துறை,பொத்துவில் , கல்முனை போன்ற முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் 10,16,12 சதவீத வாக்குகளே கிடைத்ததாகவும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் சேருவிலவில் தான் 50சதவீத வாக்குகளினால் வெற்றி பெற்றதாகவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூர் தொகுதியில் தனக்கு 6 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளே கிடைத்ததாகவும் கூறுகின்றார்.

பொதுவாக கூறுவதாயின் வடகிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர், முஸ்லிம்கள் பகுதிகளில் தனக்கு அற்ப வாக்குகளே கிடைத்ததாக கோட்டாபய ராஜபக்ஷ தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் கவராதனாலேயே குறைந்த எண்ணிக்கையில் வாக்குகள் கிடைக்க காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவித்து வருகின்றனர்.

தன்னை பற்றி தவறாக புரிந்து கொண்டிருந்ததும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டது பற்றி புறம்பான ஒரு அத்தியாயத்தில் கோட்டா ஆராய்கிறார்.

கொவிட் 19 தொற்றினால் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது பற்றி குறிப்பிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ கொவிட் தொற்றினால் இறந்தவர்களின் சடலங்களை எரிப்பது தொடர்பாக ஜனாதிபதியோ அமைச்சரவையோ தீர்மானம் எடுக்கவில்லை என்றும் சுகாதார அதிகாரிகளினால் மட்டுமே அது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

கொரோனா தொற்று இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் பரவிய நிலையில் இலங்கை தவிர்ந்த எந்தவொரு நாட்டிலும் சடலங்கள் எரிக்கப்படவில்லை.இவ்விடயத்தை தமது அமைச்சரவையில் அங்கம் பெற்ற அப்போதைய நீதி அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவையில் கோரிக்கை விடுத்ததாக குறிப்பிடும் முன்னால் ஜனாதிபதி அது தொடர்பாக அமைச்சர்கள் சாதகமாக பரிசீலித்த போதும் இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சுகாதார நிபுணரிடம் இருப்பதாக கூறி அவர்களுக்கு அக்கோரிக்கையை பாரப்படுத்தியதாக குறிப்பிடுகிறார்.நாட்டில் 10 சதவீதத்திற்கும் மேல் வாழும் முஸ்லிம் சமூகத்தின் மனிதாபிமான கோரிக்கைக்கு ஆட்சியாளர்களே தீர்வு வழங்காது அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதினால் முஸ்லிம் சமூகம் கோட்டா மீதும் அரசு மீதும் வெறிப்புக் கொண்டது.

ஒரு சமூகத்தின் உணர்வு தொடர்பான விடயமாக இவ்விடயம் இருக்கின்றது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மெத்திகா அன்று வெறுப்பாய் இருக்க தெரிவித்த காரணிகள் எதுவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை.

தவறான புரிதலினால் தன் மீது குற்றம் சுமத்தப்பட்டதாக கோட்டா தெரிவித்துள்ள கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இடம்பெறாத ஒன்றை இலங்கை நிராகரித்ததே இப்பிரச்சினைக்கு காரணமாகும்.

இந்நூல் இவ்வாறு தமிழ் முஸ்லிம் பற்றி பல குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன. பெரும்பான்மை சமூக மக்களுடைய உறவுக்கு பாதிப்பாக அமையலாம்.இந்நூலின் உள்ளடக்கத்திலிருந்து சிறுபான்மை சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு தெளிவான விளக்கம் அளிப்பது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும்.குறிப்பாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள், முஸ்லிம் புத்திஜீவிகள் இது தொடர்பாக ஆராய்ந்து தெளிவான ஒரு பதிலை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

# ஷூரா சபை ரமழான் வழிகாட்டல்கள்



*அருள்கள் நிறைந்த ரமழான் மாதத்தை இன்ஷா அல்லாஹ் இன்னும் சில நாட்களில் நாம் அடைய இருக்கின்றோம். இந்த ரமழான் எல்லா வகையிலும் பயன்மிக்கதாக அமைய வல்லவன் அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக!*

*பொதுவாக உலகமும் எமது தேசமும், முஸ்லிம் உம்மத்தும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலையில் நாம் இவ்வருட ரமழானை சந்திக்கின்றோம். எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. இதனால் இந்நாட்டு மக்கள் இன, மத வேறுபாடில்லாமல் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.*

*மேலும், போதைப் பொருள் பாவிப்போரின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே செல்கின்றது. குறிப்பாக, பாடசாலை மாணவ, மாணவிகளும் இளைஞர்களும் இப்பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் சமூகத்திற்கு தலைமைத்துவம் வழங்கவேண்டிய இவர்களது நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளது.*

*முஸ்லிம் உம்மத்தின் நிலையை அவதானிக்கும் போது கவலை தரும் நிகழ்வுகளுடனே உலக முஸ்லிம்கள் ரமழான் மாதத்தை அடையவுள்ளனர்.*

*முஸ்லிம்களின் புனித பூமியுடன் தொடர்பான பாலஸ்தீன விவகாரம் நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது. நபி (ஸல்) அவர்களும், அவர்களது தோழர்களும் அஹ்ஸாப் யுத்தத்தின் போது எவ்வாறான பயங்கர சோதனைக்கு முகம் கொடுத்தார்களோ அதற்கு ஒப்பான சோதனைக்கு பாலஸ்தீன் மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.*

*ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் இருந்தும் பாலஸ்தீன மக்களுக்கு உதவி செய்ய முடியாத கையாலாகாத நிலையில் அந்த நாடுகள் இருப்பது மிகுந்த கவலையை தருகிறது. பாலஸ்தீன மக்கள் அல்லாஹ் மாத்திரமே தமக்கு உதவி செய்வான் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன், மிகுந்த பொறுமையுடன் தமது இருப்புக்கான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.*

*வல்லவன் அல்லாஹ் அவர்களுக்கு விமோசனத்தை விரைவில் வழங்குவானாக!*

*இத்தகைய தேசிய, சர்வதேச நிலவரங்களுடன் ரமழான் மாதத்தை சந்திக்கவுள்ள நாம் எமக்கு முன்னால் உள்ள கடமைகளை சரியாகப் புரிந்து செயற்பட வேண்டும்.*

*இவ்வகையில் தேசிய ஷூரா சபை ரமழான் மாதம் தொடர்பில் பின்வரும் வழிகாட்டல்களை இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு வழங்குகிறது:-*

*1. அல்குர்ஆன் ரமழான் அல்குர்ஆன் இறங்கிய மாதம். எனவே அல்குர்ஆனை அதிகமாக ஓதுவோம். அதன் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் அதன் படி நடக்கவும் முயற்சி எடுப்போம். அதன் சில வசனங்களை அல்லது சூராக்களையாவது மனனமிட நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம்.*

*2. தொழுகை பர்ளான தொழுகைகளை உள்ளச்சத்தோடு உரிய நேரங்களில் ஜமாஅத்தாக நிறைவேற்றுவதோடு ஏனைய நபிலான வணக்கங்களில் இயன்ற வரை அதிகமாக ஈடுபட்டு எமக்கும் ரப்புக்கும் இடையிலான உறவை மென்மேலும் பலப்படுத்திக் கொள்வோம்.*

*3. பாவச் செயல்கள் ஏனைய காலங்களில் பொதுவாகவும் குறிப்பாக ரமழானிலும் அல்லாஹ் விரும்பாத காரியங்களில் அதாவது, பாவச் செயல்களில் ஈடுபடாதிருப்போம். ரமழான் காலத்துப் பாவங்கள் அல்லாஹ்வை அதிகம் கோபப்படுத்தும் என்பதையும் நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.காரணம், ரமழான் மாதம் நல்லமல்களுக்கான பருவ காலமாக இருப்பதால் அவற்றில் ஈடுபட்டு அதிகமதிகம் நன்மைகளை தேடிக் கொள்ளாமல் அதற்கு மாற்றமாக பாவச் செயல்களில் ஈடுபடுவது மிகப்பெரிய முரண்பாடாகும். நல்லமல்களில் ஈடுபடும் அதேவேளை பாவச் செயல்களிலும் ஈடுபடுவது குளித்துக் கொண்டிருக்கையில் சேற்றையும் பூசிக்கொள்வது போன்ற விசித்திரமான போக்காகும்.எனவே ரமழான் காலத்தில் பாவங்களில் ஈடுபடுவதை முற்றுமுழுதாகத் தவிர்ப்போமாக!*

*4. சர்ச்சைகள் ரமழான் காலத்து அமல்களுடன் தொடர்பான சட்ட விவகாரங்களில் இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் காணப்படும் கருத்து வேறுபாடுகளில் அளவு கடந்து ஈடுபாடு காட்டுவது புனித ரமழானின் பிரதான இலக்குகளில் இருந்து எம்மை திசை திருப்பி விடும் என்பதை கவனத்தில் எடுத்து கருத்து வேறுபாடுகளை சகித்துக் கொண்டு எமக்கு மத்தியிலான ஒற்றுமைக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.*

*5. பொருளாதாரம் மிகப் பயங்கரமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்கு இயன்ற வரை அதிகமாக உதவி செய்ய முற்படுவோம். முஸ்லிம் அல்லாத சகோதரர்களுக்கும் எமது உதவிகள் சென்றடைய வேண்டும். கடமையான ஸகாத்தை உரிய முறையில் கணக்கிட்டு முறையாகக் கொடுத்து, ஸதகாக்களை வழங்கி, அல்லல்படுவோரின் துயர் துடைத்து, உள்ளங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு அல்லாஹ்வின் திருப்தியையும் பெற்றுக் கொள்வோம்.*

*6. வீண்விரயம் பொதுவாக எல்லாக் காலத்திலும் குறிப்பாக இந்த புனிதமான மாதத்திலும் உணவு, உடை போன்றவற்றில் வீண்விரயம் செய்வதை முழுமையாகத் தவிர்ந்து கொள்வோம். இஸ்லாம் வீண்விரயத்தை தடைசெய்திருக்கிறது. அது ஷைத்தானின் சகோதரர்களது பண்பு என அல்குர்ஆன் (இஸ்ரா:27) குறிப்பிடுகின்றது. நாம் செய்யும் வீண்விரயம் பலபோது மற்றவர்களின் அத்தியாவசியத் தேவையாக இருக்கலாம் என்பதைக் கவனத்திற் கொள்வோம்.*

*7. பொழுதுபோக்கு தேவையற்ற பொழுது போக்குகளைத் தவிர்க்க வேண்டும். நேரம் என்பது வாழ்க்கையாகும். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் வீண் விளையாட்டுக்களில் ஈடுபடாமல் தமது பொன்னான நேரங்களை பயனுள்ள செயல்களில் கழிக்க வேண்டும். இதற்காக ஊர் தலைமைகள் தமது மஹல்லாக்களில் பயனுள்ள திட்டங்களை அறிமுகப்படுத்த முடியும். இவற்றை திட்டமிடுவது, அமுலாக்குவது போன்றவற்றில் இளைஞர்களை உள்வாங்கிக் கொள்ள முடியும்.*

*8. பிற சமூகங்கள் பல்லின சமூகத்தில் நாம் வாழுகிறோம் என்பதால் பொதுவாக எல்லாக் காலங்களிலும் குறிப்பாக ரமழானிலும் பிறசமயத்தவர்களது உணர்வுகளை நாம் மதித்து நடந்து கொள்ள வேண்டும். பள்ளிவாசல் ஒலிபெருக்கிகள்,வீட்டின் தொலைகாட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் என்பவற்றை பிறருக்கு தொந்தரவாக இல்லாமல் பாவித்துக் கொள்ள வேண்டும். ஸஹர், இஃப்தார்,தராவீஹ் பயான்கள் என்பவற்றின் போது இந்த அவதானம் கூடுதலாகத் தேவை. இரவு காலங்களில் பாதைகளில் விளையாடுவது, ஆங்காங்கே நின்ற வண்ணம் அரட்டையடிப்பது, கூச்சலிடுவது போன்றவற்றை குறிப்பாக இளைஞர்கள் முற்றாக தவித்துக் கொள்ள வேண்டும். புனித ரமழான் முஸ்லிமல்லாதவர்களுக்கு இடையூறான மாதம் என்ற உணர்வை நாம் அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்தி விடக்கூடாது.*

*9. துஆச் செய்வது எமது தேவைகளை நிறைவேற்றித்தரும் படி வல்லவன் அல்லாஹ்விடம் வேண்டுவதோடு எமது பாவங்களை மன்னிக்கும்படி அதிகமாக மன்றாடுவோம். பொதுவாக உலகமும், எமது நாடும், குறிப்பாக முஸ்லிம் சமூகமும் எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்களில் இருந்து வெளிவரவும், முஸ்லிம் உம்மாவின் நிலை சீராகவும், முஸ்லிம் நாடுகளில் ஸ்தீரத்தன்மை ஏற்படவும் அல்லாஹ்விடம் கையேந்திப் பிரார்த்தனை செய்வோம்.*

*இவ்வுலகில் நிலவி வருகின்ற அநீதி, அட்டூளியம், அராஜகம் என்பன இல்லாதொழிந்து, நீதி, சமாதானம், ஐக்கியம் என்பன ஏற்படவும் நாம் தொடராகப் பிரார்த்தனை செய்வோம்.*

*ரமழான் மாதம் முஸ்லிம் சமூகத்திற்கு வெற்றியை கொண்டு வந்த மாதம் என்பது எமது வரலாறாகும். எமது வாழ்க்கையில் பாவங்களைக் குறைத்து, நன்மைகளை அதிகரித்து, அல்லாஹ்விடம் எமது முறைப்பாடுகளை நம்பிக்கையுடன் முன்வைப்போம். அவனே அனைத்தையும் அறிந்தவன். அடியார்களின் தேவைகளை நிவர்த்தி செய்கின்றவன்.*

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மகளிர் தின சிறப்பு நிகழ்வு











**(சமீஹா சபீர்,**
**அஷ்ரப் ஏ சமட்)**

"இஸ்லாமிய சமூகத்திலும், மேற்குலக சமூகத்திலும் பெண்களும் குடும்பமும்" எனும் தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்யப்படு செய்திருந்த மகளிர் தினம் 2024 சிறப்பு நிகழ்வு போரத்தின் முன்னாள் தலைவி புர்கான் பீ இபிதிகார் தலைமையில் கடந்த புதனன்று கொழும்பு 7 , ஹோட்டன் பிளேஸில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் கலந்து கொண்டதோடு, வளவாளர்களாக Dr. Zahra Osati Assistant professor of women's Studies - iran, கொழும்பு பல்கலைக்கழக புவியல்துறை தலைவி பேராசிரியர் பரீனா ருஸைக் மற்றும் தபிந்து கூட்டமைப்பின் - நிர்வாக பணிப்பாளர் ஷமில துசாரி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றினர்.
இதில் உரையாற்றிய Dr. Zahra Osati தெரிவித்ததாவது,

இஸ்லாத்தில் சுதந்திரம் என்பது பெண்களுக்கு முழுமையாக வழங்க பட்டிருக்கின்றது.

அதிலும் பெண்களுக்கென்று தனியான இடமும் கொடுக்க பட்டிருக்கின்றது.

மேற்கத்தைய பின்னணியில் இதனை பார்க்கின்ற போது நடைமுறைகள் மிகவும் சிக்கல் உள்ளதாகவே காணப்படுகின்றது. அதன் அடிப்படியில் அரசிலியல் சிக்கலும் காணப்படுகின்றது.

பெண்கள் இன்று பல்வேறு துறைகளிலும் தலைமைத்துவம் வகிக்கின்ற சூழலை காணக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, நிறுவனங்களில் முகாமைத்துவ தலைவிகளாகக் கூட செயற்பட்டு வருகிறார்கள்.

அதனை அவர்கள் பெருமையாக பேசிக்கொள்கின்ற சூழ்நிலையும் காணப்படுகின்றது.

ஆனால், இஸ்லாமிய எண்ணக்கருவிலே இதை பார்க்கின்ற பொழுது மணித பண்புகளுக்கான ஒரு சமத்துவம் இஸ்லாத்தில் அதிகம் காணக்கூடியதாக இருக்குன்றது.

சில மேற்கத்தைய நாடுகளில் இடம் பெறுகின்ற குற்றச்செயல்கள் கூட ஜனநாயக செயற்பாடாக சித்தரிக்கின்ற விடயங்களும் இடம்பெறுகின்றன. தற்போது காசாவில் இடம் பெற்று வருகின்ற மனித கொலைகள், பெண்கள், சிறுவர்கள் மீது மனிதாபிமானமற்ற முறையில் இடம் பெரும் கொலைகள் கூட அவர்கள் ஜனநாயக செய்யற்பாடாக பெருமையாக பேசிக்கொள்கின்ற அளவுக்கு கூட இன்று நிலைமை வந்திருக்கின்றது.

இஸ்லாத்தில் நிச்சயமாக பெண்களுக்குரிய இடம் வழங்கபட்டு , அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள் என்ற ஒரு சிறந்த ஒரு விடயத்தை எங்களால் காணக்கூடியதாக இருக்கிறது.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட பேரியல் அஷ்ரப் உரையாற்றுகையில்,

"பெண்களைப் பற்றிய முடிவுகள் எடுக்கப்படும் இடத்தில் பெண்களாகிய நாங்கள் இருக்கின்றோமா?

எங்களது பிரதிநிதுத்துவம் அவ்விடத்தில் இருக்கின்றதா? என்று ஒவ்வொரும் கேள்வி கேட்டுக்கொள்வோமாயின் நிச்சயமாக இல்லை என்றுதான் பதில் இருக்கும்.

இன்று பெண்கள் என்ன தேவைப்பாடுடன் இருக்கின்றோம், என்னவிதமான பிரச்சனைகளுக்கு முகம் கொடுகின்றோம் என்றெல்லாம் சிந்திக்க வேண்டியவர்களாக பெண்களாகிய நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம்.

பெண்கள் பிரச்சனைகள் பற்றி பேசி முடிவெடுக்கப்படும் இடத்தில் பெண்கள் இல்லை. இது பற்றி கேள்வி எழுப்பப்படவேண்டிய காலகட்டதில் பெண்கள் இருகின்றார்கள்.

அவ்வாறு கேள்வி கேட்டால் ஷரீஆவிற்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டுவிடுகிறார்கள். ஆண், பெண் உறவை இறைவன் மிக அழகாக குர்ஆனில் சொல்லியுள்ளான்.

இறைவன் பெண்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகளை பெண்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கை முஸ்லிம் பெண்கள் தங்கள் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக பல மாற்றங்களை முன்னின்று செய்ய வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். பெண்கள் நினைத்தால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை." - என்றார்.






# நானா நீயா அவனா ?


சபீர் மொஹமட்

# தங்கமான தலைவன் !!

1966 ஆம் ஆண்டு களுத்துறையில் சுனில் பிறக்கின்றான். இரு வேறு பாடசாலைகளில் கற்றாலும் உயர்கல்வியை சுனில் தொடரவில்லை. பின்னர் சுனில் களுத்துறை பிரதேசத்தில் இருக்கின்ற ஒரு அரசியல்வாதியின் வாகன ஓட்டுனராக பணியில் சேர்கின்றான். அதனால் கொஞ்சம் மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற சுனில் அந்த அரசியல்வாதியிடமிருந்து அரசியலையும் கற்றுக் கொள்கின்றான். அத்தோடு சுனிலுக்கு எதிராக ஒரு சில திருட்டு குற்றச்சாட்டுகளும் காணப்பட்டன. அதனாலேயே “தங்கம்” என்ற ஒரு அழகான புனைப்பெயரும் அவனுக்கு கிடைக்கின்றது.

1997 ஆம் ஆண்டு முதல் முறையாக சுனில் தனது அரசியல் பயணத்தை உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலில் தொடங்குகின்றார். அப்போது நடைபெற்ற தேர்தலில் 5,409 வாக்குகளைப் பெற்ற சுனில் பேருவளை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்டு பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்படுகின்றார். அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டு மேல் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுகின்ற சுனில் 23,702 வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படுகின்றான். பின்னர் 2001 ஆம் ஆண்டு பன்னிரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 46,571 வாக்குகளைப் பெற்ற சுனில் களுத்துறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றான். அதன் பின்னர் தொடர்ந்து ஐந்து தடவைகள் சுனில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் சென்றான். இறுதியாக சுனில் 147,472 வாக்குகளை 2020 ஆம் ஆண்டு பெற்று பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

சுனிலின் அரசியல் வாழ்க்கைக்கு அப்பால் ஒரு சில சுவாரஸ்யமான கதைகளும் உள்ளன. 2008ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த 450 மில்லியன் ரூபாய் தொடர்பில் ஒரு வழக்கு, மிகப்பெரிய சவால்களுக்கு மத்தியில் காவல்துறையினர் சுனிலுக்கு எதிராக தொடர்கின்றார்கள். எனினும் இறுதியில் வழக்கை தொடர்ந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருவருக்கும் இடமாற்றம் தான் கிடைக்கின்றது. மேலும் அவர்களுக்கு குறித்த வழக்கை கைவிடுமாறு பல உயர் அதிகாரிகளும் அழுத்தம் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. சுனிலுக்கு எதிராக சட்டவிரோதமான 66 கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குறித்த வழக்கு பதியப்பட்டிருந்த நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு சுனிலை நீதிமன்றம் விடுதலை செய்கின்றது.

அதேபோல் சுனில் சமூக வலைத்தள நெட்டிசன்கள் மத்தியில் கொஞ்சம் பிரசித்தி பெற்ற ஒரு அரசியல்வாதி. துறைமுக அமைச்சராக சுனில் இருக்கும் போது இலங்கை கடற்பரப்பில் ஒரு கப்பல் தீப்பற்றி எறிய தொடங்கியது. அந்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுனில், “தற்போது கப்பலில் பரவியுள்ள தீ 85 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் உள்ளது. நாங்கள் குறித்து நெருப்பை அணைப்பதற்கான முயற்சியில் உள்ளோம். நான் அதிகாரிகளுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கியுள்ளேன்” எனக் கூறியமை இன்றுவரை சமூக வலைத்தளங்களில் பேசப்படுகின்றது. இறுதியில் முற்றாக எரிந்து சாம்பலான கப்பலை பார்க்கும்போது சுனில் கொடுத்த அறிவுரைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எம்மால் ஊகிக்க முடியும்.

அதேபோல் எமது கதாநாயகன் ஒரு முறை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் போது இலங்கைக்கு வெளிநாட்டு நிதி கிடைக்கும் விதத்தை மிக அழகாக தெளிவுபடுத்தி இருந்தார். அதிலே அவர், கப்பல் கொள்கலன்களில் இலங்கைக்கு வெளிநாட்டு நிதி குறிப்பாக டாலர் வருவதாக தெளிவு படுத்திய காணொளியை சற்று முன்னரும் நான் சமூக வலைத்தளத்தில் கண்டேன். அதே தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பின்னர் ‘சுனில் கூறியது தவறு என்றும் உண்மையில் இலங்கைக்கு வெளிநாட்டு நிதி எவ்வாறு வருகின்றது’ என்பதை தெளிவு படுத்திய அரசியல்வாதி ஒருவரும் இருந்தார். குறித்த அரசியல்வாதி பற்றியும் நாங்கள் கொஞ்சம் ஆராய்வோம்.ஏனெனில் இந்த இருவருக்கும் ஒரு மிகப்பெரிய தொடர்பு இறுதியில் உள்ளது.

அவருடைய பெயர் “ரோகித”. ரோகித்த சுனில் பிறந்து ஐந்து வருடங்களுக்குப் பின்னர் மாத்தறையில் பிறக்கின்றார். பாடசாலை கல்வியை தொடர்ந்து ரோகித ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் செல்கின்று தனது BSc பட்டப்படிப்பை தொடர்கின்றார். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஊடாக ரோகித அரசியலில் நுழைகின்றான். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் ரோகித கடமையாற்றுகின்றார். அதன்பின்னர் 1998 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைக்கு ரோகித தெரிவு செய்யப்படுகின்றார். பின்னர் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு ரோகித பாராளுமன்றத்திற்கும் தெரிவு செய்யப்படுகிறார். பின் இரு முறை பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட ரோகித கடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டபோது இலங்கை பாராளுமன்றத்தின் பிரதானமான ஒரு அங்கமான Committee On Public Enterprises எனப்படுகின்ற (COPE) குழுவின் தலைவராகவும் நியமிக்கப்படுகின்றார். நேரடியாக அரச நிறுவனங்களின் செலவுகள் குறித்து இங்கே பேசப்படுகின்றது. பொருளாதாரம் மற்றும் நிதியியல் பற்றிய பரந்த அறிவும் ஊழல் லஞ்சம் போன்ற குற்றச்சாட்டுக்கள் எதுவும் அற்ற பாராளுமன்ற உறுப்பினர்களே பொதுவாக இந்த பதவியில் நியமிக்கப்படுவார்கள்.

எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது ரோகிதவை மாத்தறை மாவட்ட மக்கள் தோற்கடிக்கின்றார்கள். மாத்தறை மக்களுக்கு “ரோகித” போன்றவர்கள் தேவை இல்லாமல் இருக்கலாம். அதற்குப் பதிலாக மாத்தறை மக்கள் ஒரு ராஜபக்ஷ குடும்பத்தின் வாரிசை பாராளுமன்றம் அனுப்புகின்றார்கள்.

மாத்தறையில் பிறந்த ரோகித வின் உண்மையான பெயர் சுனில். சுனில் ஹந்துன்நெத்தி. களுத்துறையில் பிறந்த சுனிலியின் உண்மையான பெயர் ரோஹித அபேகுணவர்தன. இந்த இருவரும் இன்று இலங்கை அரசியலில் உள்ளார்கள். ரோகித்த அபேகுணவர்தன வலுசக்தி ராஜாங்க அமைச்சர். அதேபோல் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்றத்தில் இல்லாவிட்டாலும் தற்போது தனது கட்சியுடன் இணைந்து அரசியல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். இத்தனை வரலாற்று கதைகளையும் தொடர்ந்து இந்த வார பத்தியின் சாராம்சம் யாதெனில், கடந்த வியாழக்கிழமை எமது பாராளுமன்றத்தின் ஊழஅஅவைவநந முடீ Public Enterprises எனப்படுகின்ற (COPE) குழுவின் புதிய தலைவரின் நியமனம் பற்றியதாகும். ஆம் நீங்கள் யூகித்தது சரி. புதிய தலைவராக ரோகித்த அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மக்கள் ஒருபோதும் திறமையான ஊழலற்ற அரசியல்வாதிகளை விரும்ப மாட்டார்கள். முட்டாள்தனம் என்பதை விட ஒரு சந்தர்ப்பவாத கொள்கையை பெரும்பாலான மக்கள் பின்பற்றுகின்றார்கள். அது வடக்கிலும் சரி தெற்கிலும் சரி ஒரே விதமாகவே கடந்த பல தசாப்தங்களாக காணப்படுகின்றது.

கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக அரசாங்கத்திற்கு சார்பாக வாக்களித்து பின்னர் உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி வீட்டுக்குச் சென்ற முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட் முதல் தங்கம் கடத்தி சுங்கத்திடம் சிக்கி ஒரு மாத காலம் பாராளுமன்றம் நுழைவதற்கு தடை உத்தரவு கிடைத்த அலி சப்ரி ரஹீம் வரை நாங்கள் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பிய மக்கள் பிரதிநிதிகளாகும். திரும்பத் திரும்ப இந்த நாட்டிலே நிகழ்கின்ற ஒவ்வொரு சம்பவங்களும் சிறுபான்மை மக்களின் வாழும் உரிமையை கேள்விக்கு உட்படுத்துகின்ற விதத்தில் அமைந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வெடுக்குநாரி மலை சிவராத்திரி பூஜையின் போது அங்கே நிகழ்ந்த சம்பவம் முதல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய புத்தகம் வரை சகலதும் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் வாழும் உரிமையை கேள்விக்குறிக்கு உட்படுத்தியுள்ளது.

# “தரமான கல்வியும் சமூக முன்னேற்றமும்” கல்வி உபகரணங்கள் வழங்கி வைப்பு







புத்தளம், தில்லையடி அல்ஜித்தாவில் அமைந்துள்ள மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பணிமனையில், முன்னணியின் மகளிர் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ”தரமான கல்வியும் சமூக முன்னேற்றமும்” எனும் தொடர் வேலைத்திட்டத்தின் ஒரு நிகழ்ச்சியாக தேவையுடைய தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வு உப அதிபர் நியாஸ் தலைமையில் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் முன்னணியின் செயற்குழு உறுப்பினர்களான முஹ்யித்தீன், ஜெய்னூஸ், ரிஷாத் மௌலவி, சப்ராஸ் அஷ்கா, ராஜலக்ஷ்மி மற்றும் Y.M.M.A சிட்டி போயிஸ் தலைவர் அலாம் ஆகியோரும் பங்குபற்றி கல்விப் பொதிகளையும் வழங்கி சிறப்பித்தனர்.




# பாக்கிர் மாக்காரின் "மகே கதா" நூல் வெளியீட்டு விழா




(அஷ்ரப் ஏ சமத்)

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமாகிய இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய "மகே கதா" எனும் அவரது வாழ்க்கைச் சரிதையை கூறும் சிங்கள நூல் வெளியீட்டு விழா அன்மையில் (05) கொழும்பு ஆனந்தக் கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் இடம்பெற்றது.

சிங்கள மொழியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டு வெளியிடப்பட்ட இந்நூலானது மிக விரைவில் தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் வெளிவர உள்ளது. மேலும் நூல் பற்றிய விமர்சன உரையை வல்பொல ராகுல பௌத்த கல்வி நிறுவகத்தின் பணிப்பாளரும், களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கல்கந்தே தம்மானந்த தேரர் நிகழ்தியதோடு, ஏற்புரையை பிரபல சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாநிதி ரங்கா கலன்சூரிய மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளரும், பிரபல ஊடகவியலாளருமான ஏரானந்த ஹெட்டி ஆராய்ச்சி ஆகியோர் நிகழ்த்தினார்கள். இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் வாழ்க்கையோட்டத்தில் அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் முகமாக தமது சிறு வயது முதல் பாடசாலையில் கல்வி கற்ற காலம் வரையும், கொழும்பு ஆனந்தா கல்லூரியில் விடுதி வாழ்க்கை, பல்கலைக்கழக கல்வி, சட்டக் கல்லூரி பிரவேசம், மாணவர் போராட்டம், ஐந்து தசாப்த கால கொள்கை ரீதியான அரசியல் பயணம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை அடங்களாக 19 அத்தியாயங்களை கொண்ட இந் நூலானது அவர் கல்வி கற்ற ஆனந்தாக் கல்லூரில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் - அன்று சிங்கப்பூர் போன்ற நாடுகள் நமது நாட்டினை ஓர் உதாரணமாகக் கொண்டு செயற்பட்டன. அந்த நாட்டில் வாழும் சகல இனங்களையும் ஒன்றினைத்து சமூகரீதியாக முன்னேறியுள்ளது. ஆனால் தற்பொழுது நமது நாடு எந்த நிலையில் உள்ளது என்று பாருங்கள். இந்த ஆனாந்தாக் கல்லூரிதான் எனது வாழக்கையை முன்னேற்றியது. அன்று இன, மத, வித்தியாசம் பாராமல் நாம் எல்லோரும் ஓர் தாய் மக்களைப் போன்று இந்தக் கல்லூரியில் கல்வி கற்றோம். அன்று குலரத்ன அதிபர் டீ.பி. ஜாயாவை கொழும்பு சாஹிரா கல்லூரியில் அதிபராக பொறுப்பேற்கச் சொன்னார். அதன் பிறகு நாடு முழுவதும் சாஹிரா கல்லூரிகள் உருவாகின, ஆனாந்தா, நாளந்தா போன்று ஹிந்துக் கல்லூரிகள் உருவாகின. இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக ஏனைய சிறுபான்மைத் தலைவர்கள் 50:50 கேட்டவுடன் டி.பி ஜாயா மாத்திரம் இது எமது உளப்பிரச்சினை, நாம் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற பின் பேசிக் கொள்வோம். முதலில் நாம் அனைவரும் சேர்ந்து இலங்கையர் என்ற ரீதியில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வோம். எனக் கூறி ஒரு இன நல்லுறவை ஏற்படுத்தினார். டி.பி ஜாயா பாக்கிஸ்தானின் உயர் ஸ்தானிகராகவும், டி.பி.ஜயதிலக்க இந்தியாவின் உயர் ஸ்தானிகராகவும் பதவி வகித்தார்கள். பாக்கிஸ்தான் டி.பி.ஜாயவுக்கு பிரஜா உரிமை வழங்க முற்பட்டபோது, அவர் எனது தாய் நாடு இலங்கை, அந்த நாட்டின் பிரஜையாகவே நான் வாழ்வேன் எனக் கூறி மீண்டும் இலங்கை வந்தார். இவ்வாரான பற்று எம்மவருக்கு வரவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமாகிய இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தனது உரையில் கூறினார்.

இந் நிகழ்வில் பிரதமர் தினேஸ் குணவர்த்தன, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, ஆனாந்தா கல்லூரியின் அதிபர், சர்வ மத போதகர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், பேருவளை பிரதேச வாழ் ஆதரவாளர்கள் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## மின் அத்தியட்சகராக பதவி உயர்வு

(இஸட்.ஏ.றஹ்மான்)

இலங்கை மின்சார சபையில் பணிபுரியும் ஒலுவில் இரண்டாம் பிரிவில் வசிக்கும் Z. முஜாஹித் மின் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் ஒலுவில் பிரதேசத்தில் வசிக்கும் செய்னுலாப்தீன், கதிஜா உம்மா ஆகியோரின் நான்காவது புதல்வரும் மின்னியல் துறையின் முதலாவது மின் அத்தியட்சகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டு மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



அழகிய வார்த்தைகள் மற்றும் வாக்குறுதிகளால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது. கடுமையான தீர்மானங்கள் ஊடாகவே நெருக்கடியில் இருந்து மீள முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாட்டு அரசமுறை கடன்கள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும் என்றும் 2023 முதல் 2027 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கடன் செலுத்தலுக்காக காலவகாசம் பெற்றுக் கொள்ளப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தகம், மருந்து பொருட்கள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் வெட் வரி பட்டியலில் இருந்து நீக்கப்படுவதோடு பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நிவாரணம் வழங்கப் போவதில்லை என்றும், பொருளாதாரம் ஆரம்ப கட்ட ஸ்திரப்படுத்தலில் காணப்படுவதால் நாட்டு மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

பாராளுமன்றில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, ஒரு தரப்பினர் அதிகாரத்துக்காக பொய்யுரைக்கிறார்கள். நான் அதிகாரத்துக்காக செயல்படவில்லை என்றும் நாட்டுக்காகவே செயற்படுகிறேன் என்றும் கூறினார்.

# நவீன தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் தலைப்பில் மாணவர்களுக்கான செயலமர்வு





(எம்.பஹ்த் ஜீனைட்)

சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் ஏற்பாட்டில் நவீன தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு புதன் கிழமை (06) ஷேகுல் பலாஹ் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் பொதுச்செயலாளர் இப்றான்ஸா பவ்றுத்தீன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.நௌஷாத் மொஹிதீன் வளவாளராக கலந்துகொண்டு ஊடகத்தின் முக்கியத்துவம், தனிமனித வாழ்வில் ஊடகங்களின் வகிபாகங்கள், நாட்டின் ஜனநாயகத்திற்க்கு ஊடகத்தின் பங்களிப்பு போன்ற பல்வேறு தலைப்பில் விரிவுரை வழங்கினார்.

இந் நிகழ்வில் சுமார் 120 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியதோடு பாடசாலை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வைப்பு






(அஷ்ரப் ஏ சமட்)

இலங்கை முஸ்லிம் பெண் ஆளுமைகளையும், சாதனையாளரகளையும் கௌரவிக்கும் பொருட்டு அகில இலங்கை முஸ்லிம் பெண்கள் அமைப்புடன் இணைந்து டெனாரா பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்த விருது வழங்கும் விழா அண்மையில் ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரவை அமைச்சரும் செயற்பாட்டாளருமான பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் இலங்கை நாட்டிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஆற்றிய சேவையினை கௌரவிக்கும் முகமாக IMRA விருதுகள் 2024, வாழ்நாள் சாதனையாளர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# மர்ஹூம் ஏ.ஆர்.எம்.ஜிப்ரியின் 4ஆவது நினைவு தினமும் நூல் அறிமுகமும்





இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சிரேஷ்ட ஒலி-ஒளிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர்.எம்.ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், "ஏ.ஆர். எம்.ஜிப்ரி ஒரு சகாப்தம்" எனும் நூல் அறிமுக நிகழ்வு அண்மையில் (03) மாளிகைக்காடு, பாபா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் யூ.எல். யாகூப் தலைமையில், சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஷிலா இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா் மற்றும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன் உட்பட முன்னாள் உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள், மர்ஹூம் ஜிப்ரியின் குடும்பத்தினர், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி கட்டிடம் திறப்பு விழா





(அஷ்ரப் ஏ சமட்)

கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 12 வகுப்பறைகளைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடம் கல்லூரி அதிபர் மும்தாஜ் பேகம் தலைமையில் அண்மையில் (07) திறந்து வைக்கப்பட்டது.

இக் கல்லூரியில் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் உயர்தரம் கற்பதோடு சுமார் 2500 மாணவிகள் கல்வி கற்று வருகின்றார்கள். இக்கட்டிடத்திற்காக மேல் மாகாண சபை 2017 ஆம் ஆண்டில் 35 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டிய போதிலும் கட்டிடம் முதலாம், இரண்டாம் கட்டமாக பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக அவை இடை நடுவில் கைவிடப்பட்டது. இதன் காரணமாக முன்னாள் அதிபர் ஸிஹானா அஸ்லம், பிரதி அதிபர் ஹைருன் நிஷா, கல்லூரியின் பழைய மாணவிகள், பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் ஆகியோரது அயராத முயற்சியினால் கொழும்பில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்களை அணுகி நிதியினை பெற்று இக்கட்டிடம் பூரணப்படுத்தப்பட்டு மாணவிகளிடம் கையளிக்கப்பட்டது.

மூன்றாம் நாளாம் கட்டங்களுக்கு நிதி உதவி வழங்கிய அனுசரணையாளர்கள் லைட் லைப் ஸ்தாபகர் ஜெயினுலாபுதீன், எம். எஸ். எம். ஷாஸில், யெகியா சாதிக், அப்துல் கபூர் நஸ்ரின்,எம்.எஸ்.எம். சஹ்ரி ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்சாத் நிஜாமுதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சவுதி அரேபியாவினால் இலங்கைக்கு 50 தொன் பேரிச்சம் பழங்கள் கையளிப்பு






சவுதி அரேபியாவின் மன்னர சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களுக்கான மையத்தின் தலைவர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் ஸுஊத் இலங்கைக்கு 50 தொன் பேரிச்சம் பழங்களை கடந்த புதன்கிழமை (06) நன்கொடையாக வழங்கியுள்ளார். சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான வலுவான உறவை பேணிக் கொள்ளும் வகையிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளையும், இன்னல்களையும் கருத்தில் கொண்டு நாட்டு மக்களுக்கு உதவும் வகையிலும் நன்கொடை வழங்கப்பட்டதாக சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் கலித் மூத் அல் க்தானி தெரிவித்தார். கொழும்பில் உள்ள முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலகத்தில் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் கலித் மூத் அல் க்தானி பேரிச்சம் பழங்களை புத்த சாசனம் மற்றும் மத கலாச்சார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலர்கள் திணைக்களப்பணிப்பாளர் ஜெயினுலாப்தீன் முகம்மது பைசால் ஆகியோரிடம் உத்தியோபூர்வமாக கையளித்தார். இவ்விழாவில் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரணங்களுக்கான மையத்தின் அதிகாரிகள், சவுதி அரேபியாவின் இலங்கைக்கான புதிய தூதுவர் அமீர் அஜவாத், இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், அரச திணைக்களங்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# குற்றெழுத்தை கற்பித்த ஆசிரியர் மற்றும் நிலைய பணிப்பாளர்களை பாராட்டும் நிகழ்வு

திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் குற்றெழுத்தை கற்பித்த ஆசிரியர் நஜ்ுமான் நலவங்ச,






அந்நிலையத்தின் நிறுவனரும் முன்னாள் பணிப்பாளருமான மர்ஹூம் ஜிப்ரி ஹனீபாவின் குடும்பத்தை பாராட்டும் நிகழ்வு அண்மையில் (26) இடம்பெற்றது.

அந்நிலையத்தின் பார்வை குறைபாடுள்ள பழைய மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்டு நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கம்பஹா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செயான் தௌபீக் கலந்து கொண்டாதுடன் ஆசிரியர் நஜ்ுமான் நலவங்ச, அந்நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் மர்ஹூம் ஜிப்ரி ஹனீபாவின் பாரியார் சித்தி ராபியா, மர்ஹூம் ஜிப்ரி னீபாவின் புதல்வியான நஸீஹா /ஸ்னி, அந்நிலையத்தின் முகாமையாளர் எஸ். ஐ. எம். ஹலீல், அந்நிலையத்தின் அதிபர் ரிபாயா இம்ஸான் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# வெல்லம்பிட்டி சக்ஸஸ் கல்லூரியில் இடம் பெற்ற ரமழான் வசந்த விழா





(ஐ.ஏ.காதிர்கான்)

"புனித ரமழானை மாண்புடன் வரவேற்போம்" எனும் தொனிப்பொருளிலான ரமழான் வசந்த விழா வெல்லம்பிட்டி சக்சஸ் கல்லூரியில் முதல் முறையாக கடந்த வியாழக்கிழமை (07) இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் பாத்திமா சப்ரா தாஹிர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீத், கௌரவ அதிதியாக பேரவையின் கொழும்பு-கம்பஹா மாவட்டங்களுக்கான பணிப்பாளர் நசாரி காமில் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இக் கண்காட்சியில் கல்லூரியின் மாணவ மாணவிகள் புனித ரமழான் பற்றிய உரைகள், ஹஸீதாக்கள், ஹிப்ழ் மனனம் மற்றும் ரமழான் விழிப்புணர்வு நாடகங்கள் என்பன இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய கல்லூரியின் அதிபர் பாத்திமா சப்ரா தாஹிர், கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் ஆரம்பப் பிரிவு முதல் தரம் 11 வரையிலான சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவ் மாணவ மாணவிகளின் பங்களிப்புடன் ரமழானின் வருகைக்காக வேண்டி இக்கண்காட்சியை ஒழுங்கு செய்தோம்.

இதற்கு பக்கபலமாக நின்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, கண்காட்சியில் இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் எனக்கு மகிழ்ச்சியை தருகின்றது.

மேலும் எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகளை நடாத்த உறுதி பூண்டுள்ளேன் என்று கூறினார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதம நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான எம். எம். ஜௌபர், பணிப்பாளர் ஹஸ்னி நிஸாம்தீன் உள்ளிட்ட பெற்றோர்கள், மாணவர்கள் என பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்.







பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜீம்ஆ பள்ளிவாசலில் வருடாந்த புனித புர்தா தமாம் மஜ்லிஸ் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.எம் ரபீக் (ப்ஜி) தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடறிந்த பேச்சாளர் மௌலவி அல் உஸ்தாத் ஸீ.ஐ.எம் அஸ்மீர் (ஹசனி) விஷேட சொற்பொழிவாற்றினார்.

கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி ஸெய்னுலாப்தின் (புஹ்ஜி) , பள்ளிவாசல் இமாம் அஹமட் முபாரக் , முகந்தமுஷ் ஷாதுலிகளான அல்ஹாஜ் அஹமட் ஸரூக் , அல்ஹாஜ் எம்.எம் ஹம்சா ஆகியோர் ஹலரா மஜ்லிஸை நடாத்தினர். உலமாக்கள் பள்ளிச் சங்க உறுப்பினர்கள் பெருமளவிலான இவான்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். படங்கள் பேருவளை பீ எம் முக்தார்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம்தொடர் இ.16)

இங்கே மட்டக்களப்பில் வாழும் மூன்று பிரதான மதத்தை சேர்ந்தோரும் இறந்து போனபின் “சமரசம்” காணும் இடங்கள் அமைந்திருப்பதும் கள்ளியங்காடு பிரதேசத்தின் ஒரு தனித்துவமாகும். அங்கு அமைந்திருந்த மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிவாசல், வெளியூரிலிருந்து வந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் முஸ்லிம் நோயாளிகள் மரணித்தாலோ அவர்களும் அங்கே அடக்கம் செய்யப்படுவதும்,

சாஹிறாக் கல்லூரி என்ற பெயர் இப்போது அங்கு இல்லை. அங்கிருந்து முஸ்லிம்களை கன கச்சிதமாக வெளியேற்றி விட்டு இப்பொழுது அங்கிருந்த சாஹிறா வித்தியாலயத்தின் பெயரை “அருணோதய அரசினர் பாடசாலை” என்று மாற்றியிருக்கிறது மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர்கள் தரப்பிலான இனவாத நிருவாகம். ஸ ாஹிறா வித்தியாலயம் எனும் முஸ்லிம் பாடசாலையாக இருந்து “அருணோதய வித்தியாலயம்” என தமிழர் பாடசாலையாக பெயர் மாற்றப்பட்டுள்ள கள்ளியங்காடு வித்தியாலயத்தில் இப்பொழுது ஒரு முஸ்லிம் மாணவர் கூட இல்லை.

கள்ளியங்காட்டு அரசியல் முஸ்லிம்கள் கள்ளியங்காட்டில் குடியேறி வாழ்வதற்கு முன்னரே அங்கு முஸ்லிம் மையவாடிக்கு முன்பாக கொட்டில் வடிவில் ஒரு சிறு பள்ளிவாசல் அமைக்கப்பட்டு மரணித்தவர்களுக்காக அங்கு ஜனாசாத் தொழுகை நடத்தப்பட்டு வந்ததாக அறியவருகிறது.

கேறாட்டமுனை முஸ்லிம்கள் கள்ளியங்காட்டில் காடு வெட்டிக் குடியேறிய பின்னர் அவ்வூர் கள்ளியங்காடு முஸ்லிம் கொலணி என்று அறியப்பட்டது.

அவ்வப்போது நன்கு கவனித்து வந்துள்ளார் என்று அறிய முடிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இனச்சுத்திகரிப்பு வரிசையில் 1990ல் மட்டக்களப்பு மாவட்ட கள்ளியங்காட்டு முஸ்லிம்கள் எல்ரீரீஈ இயக்கத்தினராலும் தீவிரவாத தமிழர் தரப்பினராலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேற்றப்பட்டு ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களின் பின் (2010) எங்கெல்லாமோ தவணைமுறையில் தம் வாழ்வை கழித்துவிட்டு மீண்டும் அங்கே கள்ளியங்காட்டில் முஸ்லிம்கள் மீள்குடியேறப்போனபோது பேரதிர்ச்சி காத்திருந்தது.அங்கே இருந்த மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிவாசல்இடித்தழிக்கப்பட்டு அதன் அத்திவாரத்தின் மீது பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் கட்டப்பட்டிருக்கிறது. மேலும், கள்ளியங்காடு ஸாஹிறா வித்தியாலயம் கள்ளியங்காடு மையவாடி ஆகியவையும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வத்தனை ஆக்கிரமிப்புகளும் அங்குள்ள அதிகாரமட்டங்களின் அனுசரணையோடு நடந்தேறியிருப்பதென்பது

உள்ள முஸ்லிம்கள் பயங்கரவாதி களால் 1990ஆம் ஆண்டு இனச் சுத்திகரிப்புச் செய்து கூண்டோடு விரட்டப்பட்டார்கள்.

எனினும், நிலைமை சுமுகமாகியதன் பின்னர் அந்தக் கிராமத்தில் முஸ்லிம்கள் மீண்டும் குடியேற வந்தபொழுது அவர்களின் மீள் குடியேற்றதைத் தடுத்து அந்தக் கிராமத்தில் இருந்த முஸ்லிம் ஜு/ம்மாப் பள்ளிவாசலை பிரம்மகுமாரிகள் இல்லம் என இந்து தியான இல்லமாக மாற்றியதோடு அங்கிருந்த ஸாஹிறா வித்தியாலயத்தையும் அருணோதய வித்தியாலயமாக மாற்றி ஒரு முஸ்லிமைக் கூட அங்கு குடியிருக்காமல் ஆக்கிய பெருமை இந்த அரசாங்க அதிபரையே சாரும் என்று பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விசனம் தெரிவித்தனர்.

கள்ளியங்காட்டு முஸ்லிம் கொலனி பள்ளிவாசல் முன்னாள் தலைவர் ஒருவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு அனுப்பிய முறைப்பாட்டினை அடுத்து ஜனாதிபதியின் செயலருக்கான, உதவிச் செயலாளர் அன்டன் பெரேரா காணி ஆணையாளர் நாயகத்துக்கு அந்த முறைப்பாடு தொடர்பில்

நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்.

நீங்கள் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கைபற்றி இக்கடிதம் எழுதுபவருக்கு உங்களின் கடிதப் பிரதி ஒன்றினை இவ் அலுவலகத்துக்கு அனுப்புவதுடன், தெரியப்படுத்தலாம்.

அன்டன் பெரேரா ஜனாதிபதியின் உதவி செயலாளர்.
ஜனாதிபதின் செயலாளருக்காக

பிரதி : மட்டக்களப்பு பிரதேச செயலாளர். அவசியமான நடவடிக்கைகளுக்காக

ஜானதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை பள்ளிவாசல் முன்னாள் தலைவர் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பியிருந்தார்.

ஆளுநரின் செயலாளர் “சொல்லப்பட்ட விடயம் உண்மையாகவும், இங்கு சொல்லப்பட்டதை உறுதி செய்யும் சான்றுகள் இருப்பின் கௌரவ ஆளுநர் உமக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கும்படி என்னைப் பணித்துள்ளார்.” என்று குறிப்பிட்டிருந்தார்.
கிழக்குமாகான

# மட்டக்களப்பு நகரில் நடந்த பட்டப்பகல் அபகரிப்ப



அப்பள்ளியிலே இறுதி பிரார்த்தனை நடைபெறுவதும் வழக்கமான நடைமுறையாகும்.

மேலும், அந்தப் பள்ளிவாசல், அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு புகையிர நிலையம் ஆகியவற்றுக்கு அருகில் இருப்பதால் முஸ்லிம் பயணிகள் பலர் தங்குவதற்கும் அந்தப்பள்ளிவாசல் உதவியிருக்கிறது.

அந்தக்கிராமத்திலிருந்த பாடசாலையான சாஹிறாக் கல்லூரி, பள்ளிவாசல் கட்டிடம் என்பற்றில் மட்டுமல்ல அந்தக் கிராமத்தின் சகல அபிவிருத்திகளில் சிராஜதீனும் மறைந்த முன்னாள் மட்டக்களப்பு ஆசியர் கல்லூரியின் உப அதிபரும் பிரஜைகள் குழுத் தலைவருமான மறைந்த எம்.எஸ்.எம். அசீஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

மாபெரும் மீலாதுன் நபி விழாவும் கள்ளியங்காடு சாஹிறாக் கல்லூரியில் வாணியம்பாடி தமிழ்த் துறைப் பேராசிரியர் அப்துல் றஹ/மான் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்ள 1970களில் நடைபெற்றிருக்கிறது.

அங்கு குடியேறிய முஸ்லிம்களை தமிழர் சமூக இனவாத சக்திகள் அங்கிருந்து வெளியேற்றும் முயற்சியில் இறங்கியபோது, முன்னாள் எம்.பி. மாக்கான் மாக்கார் கள்ளியங்காட்டில் குடியேறியிருந்த முஸ்லிம்களுக்காக அரச அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

அதன் பின்னரே, 1965ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் தங்களுக்கான ஒரு பள்ளிவாசலை அங்கு உத்தியோக பூர்வமாகக் கட்டி எழுப்பினர்

அன்றிலிருந்து கள்ளியங்காடு முஸ்லிம் கொலனியின் தேவைகளை ஏறாவூரைச் சேர்ந்த, மறைந்த முன்னாள் அமைச்சர் பரீட் மீராலெப்பையும் கவனித்து வந்துள்ளார்.

அதேவேளை, முஸ்லிம் கொலனியில் அமைக்கப்பட்ட சாஹிறாக் கல்லூரியின் வளர்ச்சிக்காக மறைந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத் மட்டுமல்ல மட்டக்களப்பின் சுதந்திரக்கட்சி அரசியல்வாதியும் ( Political Authority) எம்பியுமாக செயற்பட்ட ராஜன் செல்வநாயகம் தனது நிதி ஒதுக்கீட்டில் கணிசமான உதவிகளை வழங்கியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் செல்லையா ராஜதுரை கூட கள்ளியங்காட்டில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் தேவைகளை

வருத்தத்திற்குரியது.

அரசியல் யாப்பின் 14,(1)(c) பிரிவு உறுதிப்படுத்தும் இலங்கைத் தீவிலுள்ளோருக்கான மத சுதந்திரத்தின் மீது பயங்கரவாதம் புரியப்பட்டுள்ளமை குறித்து கள்ளியங்காட்டு மஸ்ஜித், கோவில் நிர்மாணிப்புக்காக அப்போது மண்முனை வடக்கின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய “திருமதி கலாமதி பத்மராஜாவினால் கபளீகரம்” எனத்தலைப்பிட்டு பாதிக்கப்பட்டு ஏமாற்றமடைந்த முஸ்லிம்களால் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டது. (கலாமதி, பின்னர் மட்டக்களப்பின் மாவட்டச் செயலாளராக பதவி உயர்வு பெற்றுக் கடமையாற்றி கடந்த 29.09.2023 அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெற்றுச் செல்லும்போது “எனது பணியை நான் செவ்வனே இந்த மாவட்டத்திற்கு ஆற்ற முடிந்திருந்தது, அதனால் மனநிறைவுடன் எனது 32 வருட அரச பணியில் இருந்து ஓய்வில் செல்கிறேன்” எனத் தெரிவித்திருந்தார்.)

ஆனால், மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியான கள்ளியங்காடு முஸ்லிம்களின் பூர்வீகக் கிராமமான இந்தக் கிராமத்தில் சுமார் 300 இற்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள், ஜம்மாப் பள்ளிவாசல், ஸாஹிறா வித்தியாலயம் என்பன அமைந்திருந்தது. இந்தக் கிராமத்தில்

தலையிட்டு அமுலில் இருக்கும் விதிகள் ஒழுங்குகளின் பிரகாரம் விவகாரத்தை தீர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார்.

அதன் பிரதிகள் தேவையான நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு பிரதேச செயலாளருக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற தகவலுக்காக முறைப்பாட்டாளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் செயலாளர்அனுப்பிய கடிதம்

காணி ஆணையாளர் நாயகம்
காணி ஆணையாளர் திணைக்களம்
ஜெனரல் கொப்பேகடுவ மாவத்தை
கொழும்பு.

மட்டக்களப்பு கள்ளியங்காடு மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிவாயல் காணியை பலவந்தமாக கைப்பற்றல்

நான் இத்தால் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு முகவரியிடப்பட்ட ( ................) என்ற விலாசத்தை கொண்ட திரு. (....................) என்பவரின் மேற்படி விடயம் சம்பந்தமான வேண்டுதலையும், அதன் உள்ளடக்கங்களுடன் ஒன்றாக இத்துடன் உங்களுக்கு அனுப்புகிறேன்

அவற்றில் உள்ளடங்கியவை சுய விளக்கம் கொண்டவையாகும் இந்த விடயத்தில் நீங்கள் தலையிட்டு அமுலில் இருக்கும் விதிகள் ஒழுங்குகளின் பிரகாரம் ,ந்த விவகாரத்தை தீர்ப்பதற்கு தகுந்த

ஆளுநரின் கடிதம்
05.03.2010 கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்.மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி மஸ்ஜிதுல் பிர்தௌஸ் காணியில் இருந்து சட்ட விரோத குடியேறிகளை வெளியேற்றும் கட்டளையை செயல்படுத்தவும், அக்காணியில் கட்டிட நிர்மாணத்தை நிறுத்த தடையுத்தரவு கட்டளை பிறப்பிக்கச் செய்யவும் வேண்டுகோள்.

மேற்படி விடயம் தொடர்பாக 26.02.2010ஆம் திகதியிடப்பட்ட, மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு கௌரவ ஆளுநருக்கு பிரதி செய்யப்பட்ட கடிதத்தினை இத்துடன் இணைத்துள்ளேன்.

சொல்லப்பட்ட விடயம் உண்மையா கவும், இங்கு சொல்லப்பட்டதை உறுதி செய்யும் சான்றுகள் இருப்பின் கௌரவ ஆளுநர் உமக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கும்படி என்னைப் பணித்துள்ளார்.
எஸ். அமிர்தலிங்கம் ஆளுநரின் செயலாளர். கிழக்கு மாகாணம் பிரதிகள் ஏ.எச்.எம் அஸ்வர், மேன்மைதங்கிய ஜானாதிபதியின் அரசியல் ஆலோசகர்
–(மட்டக்களப்பில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பாரபட்சம் தொடர், வரும் வாரமும் வரும்)




நாச்சியாதீவு பர்வீன்

# மனசை சுண்டி இழுக்கும் வண்டில் மாமா (சிறுவர் பாடல்கள் மூதூர் முகைதீன்)

எழுத்தாளர் பீ.ரீ.அஸீஸ்
கிண்ணியா – 07

*1970 ஆம் ஆண்டு காலப்பகுதியை மையமாகக் கொண்டு எழுத்துத் துறையில் பிரவேசம் செய்த*



மூதூர் முகைதீன் அவர்கள், இற்றைவரை இயங்குநிலையிலிருக்கின்ற ஒருவர். தேடல், ஆர்வம், ஆசை, முயற்சி சிறிதும் குறையாமல் தொடர்ந்தேர்ச்சியான நிலையைப் பேணுவதென்பது ஒரு வரமேயன்றி வேறில்லை. அது இவருக்கு வாய்க்கப் பெற்றிருக்கிறது. தமிழ் பேசும் நல்லுலகெங்கும் தனது இலக்கிய எண்ணக் கருக்களை ஓசை சிற்றிதழின் மூலமாக பரவ விட்ட எழுத்தாளர் மூதூர் முகைதீன், கல்விப்புலத்தில் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றியவர்.

இலக்கியப் பரப்பில் பல்வேறு பிரிவுகளிலும் கால்பதித்து, தனக்கான தனித்துவப் பாதையில் முன்னிலை பெறுகின்றார். மூதூர் பிரதேச எழுத்தாளர்களில் இவரின் ஆளுமை, எழுத்தாற்றல், அணுகியல் முறைமை என்பன இவரின் அடையாளமாகப் பதியப்பட்டுள்ளன. எதிர்நாளைய சமூகம் இலக்கியத்தின் பால் கொண்டுள்ள ஈடுபாட்டினை வளர்த்தெடுப்பதில் இவரின் வகிபாகம் காத்திரமானது.




ஈழத்து இலக்கிய வாதிகளில் எழுத்தாளர் திக்குவெல்லை கமால் போன்றவர்களுடன் பயணித்த மூதூர் முகைதீன் அழுக்காமல், சலைக்காமல், மகிழ்வு குன்றாமல் இப்பணியினை மேற்கொள்வது வரவேற்புக்குரியதாகும்.

சிறுவர்களுக்கான படைப்பினை வெளியிடாத இடைவெளியை தனது “வண்டில் மாமா“ எனும் பாடல் தொகுதியின் மூலம் பூர்த்தி செய்துள்ளார். வண்டில் மாமா மிக அழகான ஒரு நூலாக நோக்கப் படுகிறது.

மொத்தம் 60 பக்கங்கள் அடக்கமான அழகிய வடிவமைப்பு, ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமான 26 பாடல்கள், ஒவ்வொரு பாடலும் சமூக மேம்பாடு, ஆளுமை விருத்தி, பண்பாட்டியல்புகள் போன்ற பல்வேறு கருப்பொருட்களை உணர்த்தி நிற்கின்றன. வெளயீட்டு வருடம் 2023 ஆக அமைகிறது.

எங்கள் நாடு, ஊர்க்குருவி என்பன தொடக்கப் பாடலாகவும், பஞ்சு மேகமே, நீர் ஆகியவை நிறைவாகவும் அமைந்திருக்கிறது. ஆசிரியப் பணியை மேற்கொண்டதன் அடையாளமாக இப்பாடல்களை மிக யதார்த்தமாக தந்திருக்கின்றார் நூலாசிரியர். ஈழத்துப் பிரபலங்களில் ஒருவரும், மூதூர் முகைதீனின் நெருங்கிய நண்பர்களின் ஒருவருமான அன்பு ஜவஹர்ஸா அணிந்துரையினை வழங்கியுள்ளதுடன், கவிஞர் இ.இரத்தினசிங்கம் நூலாசிரியர் பற்றிய குறிப்பினையும் தந்துள்ளனர்.

உலகெங்கும் நடைபெறுகின்ற யுத்தங்களில், வன்முறைகளில் சிக்கிச் சீரழிந்து உயிரிழக்கின்ற குழந்தைகளுக்கென இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

“எங்கள் நாடு“ எனும் பாடல் தேசியப்பற்று, சமூக ஒற்றுமை என்பவற்றை உணர்த்தி நிற்கின்றன. இலங்கைத் திருநாட்டின் வளங்களும், செல்வங்களும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இன்பமும், சந்தோஷமும் பெற்று வாழ்வதையும் எடுத்துரைக்கிறது. பேசும் மொழி, கடல், நதி, தோட்டம், வயல்வளங்கள், எழுத்தாளப்பட்டுள்ளது. பண்பட்ட எழுத்தாளரின் பார்வை அங்கே பளிச்சிடுகிறது. அன்பு, அகிம்சை, நன்னெறியும் போதிக்கப்படுகிறது.

நீர் வளமும் நில வளமும்
நிறைந்த தெங்கள் நாடு
நீண்ட மகா வலிகங்கை
நெளிந்தோடும் நாடு.

இன்புறவே மக்கள் இங்கு
இணைந்து வாழும் நாடு
இலங்கை எனும் பெயர்கொண்டு

**இலங்கும் எழில் நாடு**

எங்கே போகிறீர்? ஒரு சிறுவனின் கேள்வியாகவும் அதற்கான பதிலாகவும் அமைகிறது. பறவை, சேவல், உழவு மாடு, வண்ணத்திப்பூச்சி, சிறுவர்கள், பாடசாலைச்சிறுமி என இப்பாடல் விரிகிறது. கேள்வியும் பதிலும் மிக அழகாகவும் அர்த்தபுஷ்டியாகவும் உள்ளது. உண்மையில் சிறுவர்களை ஆகர்சிக்கக்கூடிய அருமையான பாடல்.

பறவைகளே பறவைகளே
எங்கே போகின்றீர்
பட்டுச் சிறகை விரித்து எங்கே
பறந்து போகின்றீர்...?

பழுத்த பழம் தேடி நாமும்
பறந்து போகின்றோம்
பழம் கிடைத்தால் பகிர்ந்து உண்டு
பசியைப் போக்குவோம்

தாயை, தாயன்பைப் பற்றிப் பாடாத, எழுதாத எழுத்தாளர்கள் யாரும் உலகில் பிறந்ததுமில்லை. பிறக்கப்போவதுமில்லை. இந்த வகையில் இந்நூலாசிரியரும் தாயைப் பற்றி மிக அழகாகப் பாடுகின்றார். தாயின் முக்கியத்துவம், செயற்பாடு, அரவணைப்பு, பாசம், அழகு, கருணை, காருண்யம் என்பனவும் குறிப்பிடப்படுவதில் பாடல் தூக்கலாக அமைகிறது. பாடல்களுக்கெல்லாம் அம்மாவாக இப்பாடல் அமைந்துள்ளது.

அன்பு காட்ட அம்மாபோல
யாருமில்லை உலகிலே
என்றும் அவர் அறிவுரையை
ஏற்று நடப்போம் வாழ்விலே

கன்னத்திலே முத்தமிட்டு
கனிவைக் காட்டும் அம்மா
அன்னத்தை ஊட்டி என்னை
அரவணைக்கும் அம்மா

இவ்வாறு எல்லாப் பாடல்களும் முக்கியத்துவமும் சிறப்பும் பெறுவதை அவதானிக்க முடிகிறது. இலக்கியம் மென்மேலும் வளம் பெறுவதற்கு இதுபோன்ற இன்னும் பல நூல்களை நூலாசிரியர் வெளிக்கொணர வேண்டும் என்பது எனது வாழ்த்தாக அமைகிறது.

நூல் : வண்டில் மாமா
நூலாசிரியர்: மூதூர் முகைதீன்
விலாசம்: நொக்ஸ் வீதி, மூதூர்
வகை : சிறுவர் பாடல்கள்
வெளியீடு : ஜே.எம்.ஐ. வெளியீட்டகம்

# புனித ரமழான்

புனித ரமழான்
புவியெங்கும்
இனிய செய்தியை
எடுத்து வந்தது.

பகலும் இரவும்
உணவைத் தந்த இறைவன்
பசித்திருந்து நோன்பு நோற்கப்
பகர்ந்தான்.

பகலில் பதினான்கு
மணித்தியாலம்
பசித்திருந்த நோன்பை
உகந்தான்.

நோன்பு என்பது
வெறும் பசி தாகமல்ல
பாவத்தை விட்டும்
பவ்வியமாய் இருப்பதே
நோன்பு!

ஊரார்பலாய் கழுவி
விழுந்து விழுந்து
சிரிப்பது நோன்பல்ல!
பொழுது முழுக்க
சினிமாப்பார்த்து
பொழுதைக் கழிப்பது
நோன்பல்ல!

தராவீஹ் தொழுங்கள்
வித்ர் தொழுங்கள்
தஹஜ்ஜுத் தொழுங்கள்
தக்வாவை வளருங்கள்.

இது அல்குர்ஆனின் மாதம்
அதிகம் குர்ஆனை
ஓதுங்கள்! சிந்தியுங்கள்!

அலுமாரிக்குள்
அடுக்கி வைத்த
அல்குர்ஆனை எடுத்து
ஒட்டறை தட்டி
ஓதப் பாருங்கள்!

இன்னொரு மனிதனுக்கு
இடையூறு கொடுக்காமல்
இரவில் விழியுங்கள்
இபாதத்செய்யுங்கள்!

பாவத்துக்கான மன்னிப்பு
படைத்தவன் உடன்
தருவான்.

தௌபா செய்யுங்கள்
திக்ர் ஸலவாத் ஓதுங்கள்
ஸதகா செய்யுங்கள்!
ஸக்காத்தும் வழங்குங்கள்!

இவ்வாண்டு
நோன்பு
மாண்புறு நோன்பாக
மலரட்டும்!

– மௌலவி காத்தான்குடி பௌஸ் –

# அர்ப்பணிப்புடன் செயலாற்றும் லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் gastroenterology பிரிவு





(கியாஸ் ஏ. புஹாரி, அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் பிறந்த குழந்தை முதல் 14வயது வரை கெஸ்ரிக், gastroenterology குடல் இறக்கம் நோய் 2022 ஆண்டு காலத்திலிருந்து கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதற்கான சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றது. இதற்காக கடந்த புதனன்று இவ் வைத்தியசாலை உள்ள சிறுவர் வைத்திய நிபுணர்கள், ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு இத்துறை சம்பந்தமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் சமன் ரன்டிராஜத் இத்துறை சார்ந்த தாதியரும் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதற்காக நிரந்தரமான பரிசோதனைகள். சிகிச்சைகள், வெளிநோயளர் சிகிச்சை மற்றும் சிறுவர்கள் வயிறு நோவு, குடல்இறக்கம் கெஸ்டிக் போன்ற நோய் ஆளாகும் குழந்தைகளுக்கு பெருமளவில் உள்ளதை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ் வகையான குழந்தைகள் வயிற்று நோவு அடிக்கடி அழுதல் போன்ற காரணங்களாகும்.

இதற்காகவே விசேட வைத்திய நிபுணர்களோடு இணைந்து இந் நோயைக் குணப்படுத்துவதற்காக வைத்தியத்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளரான பேராசிரியர் சம்ன மற்றும் கலாநிதி சி.வி ரத்சலா ஆகியோர்கள் இணைந்து இலங்கையில் சிறுவர் சிகிச்சையில் செயற்பட்டு வருகின்றனர்.

அதற்கு மேலாக இத்துறையில் சார்ந்த தாதியர்கள், ஆய்வாளர்கள், கிளிக் ஊழியர்கள் அறிக்கையிடுபவர்கள், பயிற்சியளிக்கப்பட்டு கொழும்பு லேடி றிஜ்வே வைத்தியசலையில் குழந்தைகளுக்கு கெஸ்டிக், குடல்இறக்கம், கிளிக் அறை இலக்கம் 39 தெலைபேசி இலக்கம் 0753464313 என்ற இலக்கத்துடன் இவ்வகையான நோய்யுள்ள குழந்தைகளது பெற்றோர்கள் அழைப்பினை எடுத்து சிகிச்சியை பெற்றுக் கெள்ளமுடியும்.

சாதாரனமாக தனியார் வைத்தியசாலையில் upper Gastoenrology 1 இலட்சம் மேலும் Lower Gastoenrology 1இலட்சத்து 30 ஆயிரம், குழந்தை சுகாதார பராமரிப்பு 65 ஆயிரம் என அறவிடப்படுகின்றது. ஆனால் இச் சேவை இங்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றது. இருந்தும் சில வைத்திய சிகிச்சை மருந்து வைகைகள் வெளியில் இருந்தே பணம் செலுத்தி வாங்க வேண்டி ஏற்படும்.

## மனநலமும் ஆலோசனையும் 22

# உதவும் மனநிலை

மற்றவர்களுக்கு உதவும் மனநிலை கொண்டவர்கள், பிறர்நலம் பேணக்கூடியவர்களாகவும் மற்றவர்களின் நல் வாழ்வில் அக்கறை கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இந்த மனப்பான்மை அவர்களின,

– சிந்தனையில் ஆழம்மிக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது

– அவர்களது சமூகத்தொடர்பை அதிகரிக்கச் செய்கிறது

– அவர்களது சுயமான பிரச்சினைகளிலிருந்து மனதைத் திசை திருப்பிவிடுகிறது

– தன்மதிப்பை வளர்க்கிறது.

– வழங்கும் ஆற்றலை வழுப்படுத்துகிறது

என 'எக்ஸ்டர் மருத்துவக்கல்லூரி மருத்துவர் சுசேன் ரிசர்ட்' மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றவர்களுக்கு உதவுவது எமது மனநிலையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவது போன்று எமது உடல் நலத்திலும் பல நன்மைகளை கொண்டு சேர்ப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

மற்றவர்களுக்கு உதவுவது,

– எம்மை சுறுசுறுப்பாக செயற்படத் தூண்டுகிறது

– எமது உடலில் ஏற்படும் அழுத்தங்களைக் குறைத்துவிடுகின்றது

– எமது உடலில் உருவாகும் எதிர்மறையான செயல்விழைவுகளையும் குறைத்துவிடுகின்றது

– நோய்களிலிருந்து எமது உடலை பாதுகாக்கத் துணைபுரிகின்றது

என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாம் மற்றவர்களுக்கு செய்யும் உதவிகள் சிறியனவோ பெரியனவோ எந்த வகையில் இருந்த போதிலும் அவை எமக்கு உள, உடல் ரீதியான நன்மைகளை பெற்றுத்தருவதை காணலாம். குறிப்பாக எமக்கு ஏற்படும் மனஅழுத்தம் மனஉளைச்சல் என்பன குறைந்து போவதற்கு மற்றவருக்கு உதவுதல் காரணமாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

எங்களுக்கு நாம் செலவு செய்வதைவிட மற்றவர்களுக்கு செலவு செய்வதானது மனதில் கூடுதலான மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் மற்றவருக்கு உதவுவது நரம்பியல் மாற்றத்தை தூண்டி எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

மற்றவர்கள் ஏதேனும் மனஅழுத்தம் சார்ந்த சங்கடங்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கும்போது அதிலிருந்து வெளிவர அவர்களுக்கு உதவி செய்வதானது எமது சொந்த உணர்ச்சிகள் ஒரு ஒழுங்குமுறைக்கு ஏற்ப செயற்பட ஆரம்பிக்கிறது என்று கொலம்பிய பல்கலைகழகத்தின் சமீபத்திய ஆய்வு கூறுகிறது.

உதவும் மனப்பான்மை பற்றிய ஓர் ஆய்வு வயதானவர்களை வைத்து நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் மற்றவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் உதவி செய்யாமல் இருந்தவர்களைவிட நீண்டகாலம் வாழக்கூடியவர்களாகவும் மகிழ்ச்சியான மனநிலையைக் கொண்டவர்களாகவும் இருந்தது பற்றி கண்டறியப்பட்டது. அதேநேரம் மற்றவர்களுக்கு உதவி செய்தவர்கள் அவர்களால் உதவி செய்யப்பட்டதை உணரும்போது அவர்களது மூளை இரசாயனத்தில் மிகச்சிறந்த மாற்றம் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

மற்றவர்களுக்கு உதவிசெய்ய, கொடுக்க, எடுக்க, பரிமாற பெரிய செல்வமும் தகுதியும் திறனும் இருக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. ஏதாவது ஓர் இலகுவான முறையால் மற்றவர்களுக்கு எங்களால் உதவலாம். நாம் யாராக இருப்பினும் பரவாயில்லை. ஆனால் மனிதனாக இருந்தால் மட்டுமே போதுமானது. ஏதோவொரு வகையில் மற்றவர்களுக்கு உதவும் மனநிலையை வளர்த்து உடலாலும் உள்ளத்தாலும் ஆரோக்கியம் பெற்றவராக ஆக்குவோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# பாடசாலை மாணவர்களுக்கான இலவச அப்பியாச கொப்பிகள் வழங்கும் நிகழ்வு







**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் 10 வது வருட நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான இலவச அப்பியாச கொப்பிகள் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் ஸ்தாபகர் முஸம்மில் ஹாஜி உள்ளிட்ட சங்கத்தின் அங்கத்தவர்களின் ஏற்பாட்டில் வத்தளை புதிய நகர சபை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எம்.ஆர்.எம்.மொஹிடீன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஹம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம், தமிழ் , சிங்கள பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் ஏ.எச்.எம். மாஹிர் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, கொலன்னாவ பள்ளித் தலைவர் ஐ.வை.எம்.ஹனீப், உலக பௌத்த மையத்தின் இலங்கை நிலையத் தலைவர் சுதத் தேவபுர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன் விசேட பேச்சாளராக கலாநிதி ரவூப் ஷெய்ன் மற்றும் மௌலவி அஸ்ஸெய்க் இப்பராஹிம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதிதிகள் மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்ததுடன் அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் கொழும்பு-07 இல் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் "இஸ்லாமிய சமூகத்திலும் மேற்கத்திய சமூகத்திலும் பெண்களும் குடும்பமும்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற மகளிர் தின சிறப்பு நிகழ்வில் பிரதம அதிதி முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள் பொன்னாடை அணிந்து காணப்படுகிறார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என்.எம். அமீன், இலங்கை வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் முன்னாள் தலைவியுமான புர்கான் பி இப்திகார், கலாபூஷணம் யாழ் பரீட் இக்பால் ஆகியோரையும் படத்தில் காணலாம்.




**பயாஸா பாஸில்**

# வெந்தயத்தின் நன்மைகளா?

வெந்தயம் கசப்பாக இருந்தாலும் நார்ச்சத்து, புரோட்டின், கல்சியம் மற்றும் இரும்புச்சத்து போன்றவை ஏராளமாக நிறைந்துள்ளது. இத்தகைய வெந்தயத்தை இரவில் முழுவதும் நீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட்டு நீரை குடித்து வந்தால் பல நன்மைகள் கிடைக்கும். வெந்தயத்தில் உள்ள நார்ச்சத்து நம் உடலின் சர்க்கரை அளவை சீராக்குவதால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்த உதவுகிறது. வெந்தயத்தில் பொட்டாசியம் இருப்பதால் இரத்தத்தையும் இருதய துடிப்பையும் கட்டுக்கோப்புக்குள் வைப்பதுடன் கெட்ட கொலஸ்ட்ராலின் அளவை இரத்தத்தில் குறைக்கிறது. நெஞ்சு எரிச்சல் மற்றும் அஜீரணக் கோளாறுகள் இரத்தசோகை போன்ற பிரச்சனைகளை குணமாக்க வெந்தயத்தை முளைக்க வைத்து சாப்பிடலாம்.

# ரமழானை வரவேற்க நீங்கள் தயாரா...!

மாதங்கள் ஒவ்வொன்றும் பின்னி பிணைந்து ஒன்றன்பின் ஒன்றாய் வருகையில் சிறப்பு மிக்க ரமழானை வரவேற்க நாம் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையிது...

நமது வீட்டை அழகான முறையில் மாற்றியமைப்பதோடு எமது ஆன்மாவையும் சீரமைத்துக் கொள்வது கட்டாயமாகும்.

புத்துணர்ச்சியோடு ரமழானை வரவேற்க உங்களுக்கு சில வழிகள்.......!!!!

மூ வீட்டைச் சுத்தம் செய்து தேவையற்றவற்றை மற்றும் குப்பை கூழங்களை அகற்றலாம்.

- வீட்டின் சுத்தத்தை பேணலாம்.




- குர்ஆனிய வசனங்களை சுவர்களில் ஒட்டலாம். அவற்றை பிள்ளைகளுக்கு காட்சிப்படுத்தி வைக்கலாம்.

- சின்ன சின்ன ஸதக்காக்களை பிள்ளைகளின் மூலமாகவே வழங்கலாம்.

- நோன்பு பிடிப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்யலாம்.

- எமது ஆன்மாவையும் சீர்படுத்திக் கொள்ளலாம்.

- தௌபாவை அதிகமதிகம் கேட்கலாம்..

வரும் ரமழானை வாஞ்சையுடன் வரவேற்று பூரண பலன் பெற இறைவன் அருள் புரிவானாக...!!!
இன்ஷா அல்லாஹ்...!!

# நுவன் துஷாரவின் ஹெட்ரிக்கினால் வங்கப்புலிகளுக்கு எதிரான

## ரி20 தொடரை வென்றது இலங்கைச் சிங்கங்கள்



அரபாத் பஹுர்தீன்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 3 ஆவதும் இறுதியுமான இருபதுக்கு இருபது போட்டியில் நுவன் துஷாரவின் ஹெட்ரிக்கின் உதவியுடனும் குசல் மெண்டிஸின் அதிரடியுடனும் 28 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை 2:1 என கைப்பற்றியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணியும், 2ஆவது போட்டியில் பங்களாதேஷ் அணியும் வெற்றி பெற தொடர் 1:1 என சமநிலை பெற்றிருந்தது. இந்நிலையில் தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான போட்டி இன்று இலங்கை நேரப்படி மதியம் 2.30 மணிக்கு ஆரம்பித்திருந்தது. இப் போட்டியில் இலங்கை அணியின் தலைவரான வனிந்து ஹசரங்க பொறுப்பேற்றார். மேலும் அவிஷ்க பெர்ணான்டோ, டில்ஷான் மதுசங்க மற்றும் காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகிய மதீஷ பத்திரன ஆகியோருக்கு பதிலாக தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க மற்றும் நுவன் துஷார ஆகியோர் இப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்றனர்.

இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பாட்டம் வாய்ப்பை இலங்கை அணிக்கு வழங்கியது.

இதன்படி களம் நுழைந்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான குசல் மெண்டிஸ் நிலைத்திருக்க மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர். இருப்பினும் தனி ஆளாய் போராடிய குசல் மெண்டிஸ் 6 ஆறு ஓட்டங்கள் அடங்களாக 86 ஓட்டங்களை விளாசினார். இதனால் இலங்கை 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து 174 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் டஸ்கின் அஹமட் மற்றும் ரிஷாட் /ஹுசைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் 175 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த பங்களாதேஷ் அணிக்கு இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான நுவன் துஷார இடையூராக இருந்ததுடன் பங்களாதேஷ் அணியின் முன்னனி முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களை தொடராக வீழ்த்தி ஹெட்ரிக் சாதனை படைக்க 32 ஓட்டங்களுக்கு முதல் 6 விக்கெட்டுக்களையும் இழந்து பறிதவித்தது பங்களாதேஷ் அணி. இருப்பினும் 7 ஆவது விக்கெட்டில் இணைந்த ரிஷாட் /ஹுசைன் அதிரடியாக 6 ஓட்டங்களை விளாசி ஆறுதல் கொடுத்து 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த டஸ்கின் அஹமட் 31 ஓட்டங்களுடன் இறுதி விக்கெட்டாக வெளியேற பங்களாதேஷ் அணியால் 19.4 ஓவர்களில் சகல விக்கட்டுக் களையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்து. இதனால் இலங்கை அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் தொடரை 2:1 என கைப்பற்றியது. பந்துவீச்சில் நுவன் துஷார 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.








# அல் அக்ஸா வின் நடப்பாண்டின் சம்பியன் பட்டம் மக்கா இல்லம் வசம்



கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் நடப்பாண்டில் சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது மக்கா இல்லம்.

புத்தளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்பிட்டி கோட்டத்தின் 78 வருட வரலாற்றைக் கொண்ட அல் அக்ஸா தேசிய பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. அதனடிப்படையில் ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கான குழு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பின்னர் முதலாம் திகதியிலிருந்து தனி மற்றும் குழு சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடப்பாண்டின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.என்.எம். நஸ்ரின் மற்றும் எஸ்.எப். சாஜினாஸ் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு அதீதியாக கல்பிட்டி கோட்டக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் திருமதி தீப்தி பெர்ணான்டோ கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் கல்பிட்டி கோட்டக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகர்கள், ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், கல்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கல்பிட்டி மக்கள் வங்கியின் முகாமையாளர், உள்ளூர் கல்வியாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என அதிகமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இப் பாடசாலையின் மக்கா, மதீனா மற்றும் ஜெருசலம் என 3 இல்லங்கள் போட்டியிட்ட இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் நடப்பாண்டில் சம்பியன் கிண்ணத்தினை 325 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மக்கா இல்லம் தனதாக்கிக் கொண்டது. இரண்டாம் இடத்தினை 296 புள்ளிகளுடன் மதீனா இல்லமும் , மூன்றாம் இடத்தினை 265 புள்ளிகளுடன் ஜெருசலம் இல்லமும் பெற்றுக் கொண்டது. இந்நிகழ்விற்கு அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் , நலன்விரும்பிகள் என பலரும் உதவி செய்திருந்தமை விசேட அம்சமாகும்.







களுத்துறை மாவட்ட ஜனாஸா நலம்புரி அமைப்பினால் களுத்துறை சிறைச்சாலையில் கைதிகளாக இருக்கின்ற முஸ்லிம் சிறை கைதிகளுக்கு ரமழான் மாதத்துக்கு தேவையான உணவுப் பொருட்களை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். படங்கள் பேருவளை பீ எம் முக்தார்

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.